சத்திய வேத

# பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

> தன்னலத்தை வளர்த்துக்கொண்டு பிறர்க்குத் தன்னை உயர்ந்தவனாகக் காட்டிக்கொள்ளும் நாகரிகத்தைவிட, அடக்கத்தை வளர்த்து, அன்பைப் பெருக்கும் பண்பே மிகச் சிறந்தது.
>
> —யாரோ

96-ம் புத். | 1971-ம் ஆண்டு ஆனி மாதம் 19-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 21-ம் இல

## கத்தோலிக்கர் தொகை பெருகுகின்றது குருமார்தொகை குறைகின்றது

உலகிலே பல பாகங்களில் தேவைக்குப்போதிய கத்தோலிக்க குருமாரில்லாதிருப்பது திருச்சபையின் கவலைகளுள் மிகப் பெரிதொன்றாகும். இக்குறை நீங்குவதற்காகப் பரிசுத்த தந்தை கத்தோலிக்க மக்களைச் செபித்துவருவது மாத்திரமல்லாது இதற்கு வேண்டிய தியாகத்தைச் செய்யுமாறும் அடிக்கடி தூண்டிவருகின்றார். ஐக்கிய அமெரிக்க தேசத்திலிருந்து கிடைத்திருக்கும் புள்ளிவிபரங்களிலிருந்து அத்தேசத்தில் இன்று கத்தோலிக்கரின் தொகை 48,214749 என அறிகின்றோம். சென்ற வருடத்திலும் 342640 பேரால் கூடியிருக்கின்றது. அதே சமயம் அத்தேசத்தில் சென்ற வருடத்திலும் பார்க்க குருமார் தொகை 1031 குறைவாகிவிட்டது. இந்நிலைமையைக் கருதிப் பரிசுத்த தந்தை உலக இளைஞர்கள் குருத்தொண்டை ஒரு வீரத்தொண்டாக மதித்து அச்சேவையில் துணிவுடனும் மகிழ்ச்சியுடனும் இறங்குமாறு கேட்டிருக்கின்றார்.

## பிழைபோனவர்களைத் திருத்தி எடுப்பதே கிறிஸ்தவ முறை

இம்மாதம் 3-ம், 4-ம் திகதிகளில் கொழும்பு அதிமேற்றிராணிமார் இல்லத்தில் நமது நாட்டு மேற்றிராணிமார் ஒன்றுகூடி இந்நாட்டில் தோன்றிய குழப்ப நிலையினால் ஏற்பட்ட சீர்கேடுகளை ஆராய்ந்து அவற்றில் ஈடுபட்ட இளைஞரை எவ்வாறு நடத்திய நள வேண்டுமென்று ஆலோசித்தனர். பிழைபோனவர்களைத் திருத்தி எடுத்துக்கொள்வதே கிறிஸ்தவ முறையாகும், எவ்வளவு இரக்கம் காண்பிக்க முடியுமோ அவ்வளவு இரக்கத்தைக் காண்பித்து பிழைபோன இளைஞரைத் திருத்தி எடுக்கத் தம்மாலான உதவிகள் யாவும் அரசாங்கத்துக்குக் கொடுத்துதவ அவர்கள் வழிவகைகளை ஆராய்ந்தனர். இந்நாட்டிலுள்ள குருமாணவர் கல்லூரிகளில் ஏற்படவேண்டிய திருத்தங்களும் மேற்றிராணிமாரால் ஆலோசிக்கப்பட்டன. கத்தோலிக்க மத்திய தகவல் ஸ்தாபனம் ஒன்றைக் கொழும்பில் நிறுவுவது பற்றியும் அது, நாட்டின் தகவல் ஸ்தாபனங்களுடன் கொள்ளவேண்டிய தொடர்புகள் பற்றியும் ஆராயப்பட்டன.

## வடதுருவ வீரனுக்குப் பாப்பரசரின் பாராட்டு

இம்மாதம் 19-ம் திகதி வடதுருவத்தை அடைந்து அந்த இடத்தில் ஒரு திருக்குருசு நாட்டிவந்த இத்தாலிய வீரனாகிய குயிடோ மொன்சீனோ என்பவருக்குப் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் தமது பாராட்டுக்களை அறிவித்திருக்கிறார். வீரச்செயல்களை வெறும் புகழுக்குமாத்திரம் செய்வதிலும் தேவனின் பெருமையை அவற்றினால் விளங்கச்செய்வது மாண்புமிக்கது என அவர் எடுத்துக்காட்டினார்.

## குருமாரின் விரத்தத்துவத்தின் அவசியம்

குருமாரின் விரத்தத்துவத்தின் அவசியத்தை பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் அண்மையில் பலமுறைகளிலும் உறுதிப்படுத்தியிருக்கிறாரெனினும் அதுபற்றி புரட்டாசி மாதம் வத்திக்கானில் நடக்க இருக்கும் சினொட்டில் விரிவாக விவாதம் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றது. சினொட் கூட்டத்துக்கு வேண்டிய ஆயத்தம் செய்துவரும் மேற்றிராணியார் றூபின் அடிகளார் உலக மேற்றிராணிமாருக்கு அனுப்பியிருக்கும் சினொட் ஆயத்த மடலில் குருமாரின் விரத்தத்துவத்தின் அவசியத்தைப் பற்றிப் பாப்பரசரின் அபிப்பிராயத்தை தெளிவாக அறிவித்திருக்கிறார். குருமாராவோர் செய்யும் தியாகம் பூரண தியாகமென்றும் இத்தியாகத்தைச் செய்யக்கூடியவர்களே அதைச் செய்யக் கேட்கப்படுகின்றனரென்றும் வற்புறுத்தப்பட்டிருக்கின்றது.

## மொசம்பிக்கிலிருந்து 'வெள்ளைப் பிதாக்கள்' வெளியேறுகின்றனர்

ஆபிரிக்காக்கண்டத்தில் மொசம்பிக் பிரிவிலிருந்து தம் சந்நியாசசபையினர் வெளியேறுவதாக அங்கே 1946ஆம் ஆண்டுதொடக்கம் தொண்டாற்றிவந்த வெள்ளைப்பிதாக்கள்சபை அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர். மொசம்பிக் போர்த்துக்காலின் பாரம்பரிய கொள்கையின்படி சுதேசிகளின் முன்னேற்றம் மிக மந்தவேகமாகவே அங்கு நடைபெறுகின்றது. ஆகவே சுதேசகுருமாரின் முன்னேற்றமும் அங்கே அவ்வாறுதான். இது "வெள்ளைப் பிதாக்களின்" கொள்கைக்கு முரணாயிருப்பதுதான் அவர்கள் வெளியேற்றத்துக்குக் காரணமாகும்.

## இம்மாத இலவச மறை ஆசிரியர் பயிற்சி வகுப்புக் கால அட்டவணை

| திகதி | நாள் | நேரம் பிற்பகல் | ஆசிரியர் |
|---|---|---|---|
| 20-6-71 | ஞாயிறு | 3-30 | வண. சுவாமி இம்மனுவேல் |
| 22-6-71 | செவ்வாய் (போயா) | 3-30 | வண. சுவாமி சேவியர் குருஸ் |
| ,, | ,, | 4-30 | சகோதரி அன்ரனி யோசவ் |
| 27-6-71 | ஞாயிறு | 3-30 | வண. சுவாமி இம்மனுவேல் |
| 30-6-71 | புதன் (போயா) | 3-30 | வண. சுவாமி இம்மனுவேல் |
| ,, | ,, | 4-30 | சகோதரி அன்ரனி யோசவ் |

பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றுவோர் தவறாது சமுகமளித்துப் பயன்பெறுங்கள்.

மறைக்கல்வி நடுநிலையம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

## பிரான்சிய அதிமகிமைப் பதக்கம் விருத்தாப்பிய சந்நியாசி பெற்றார்

பிரான்சு அரசாங்கத்தார் தம் தேசத்தவர், உள்நாட்டிலோ பிறநாட்டிலோ சிறந்த சமூகத்தொண்டு செய்பவர்களுக்கு "லீஜன் ஒவ் ஒனர்" என்னும் அதி மகிமைப்பதக்கம் அளிப்பது வழக்கம். இந்தக் கௌரவத்தை இலங்கையில் பெற்ற பிரான்சிய மக்களுள் இருவர் காலஞ்சென்ற அதிவணக்கத்துக்குரிய லெகொக் சுவாமியாரும் லெஜென் சுவாமியாருமாம். இவ்வரிசையினரில் ஒருவராக இவ்வருடம் இன்னுமோர் பிரான்சுதேச சந்நியாசியை பிரான்சு தேசம் இலங்கையில் கௌரவமளித்திருக்கிறது. அவரும் அமலோற்பவ தியாகிகளின் சந்நியாசிகளுள் ஒருவர். அவர் சங்கைக்குரிய "பிறதர்" றெனே அடிகளாரே. இவர் தென்னிலங்கையில் இளைஞர் கைத்தொழில் கற்கும் கலாசாலையாகிய மகோன ஸ்தாபனத்தில் 70 வருடகாலம் அரிய கைத்தொழில் வேலைகளை இளைஞருக்குக் கற்பித்துவந்திருப்பதுமல்லாது அவர்களைத் தமது போதனையாலும் சாதனையாலும் நல்வழிப்படுத்தி வந்திருக்கின்றார்.

## சிறுமிகள் பூசைப்பரிசாரகராக முடியாது

ஐக்கிய அமெரிக்காநாட்டில் பிலடெல்பியா என்னும் நகரத்தின் அதிமேற்றிராணியாராகிய கருதினல் கிரோல் அடிகளார் தமது மேற்றிராசனத்தில் பெண்பிள்ளைகள் பூசைப் பரிசாரகர்களாகத் திருப்பலியில் உதவிசெய்வதை முற்றாக நீக்குமாறு உத்தரவிட்டிருக்கிறார். சில விசாரணைப் பங்குகளில் பெண்பிள்ளைகளும் பூசைப் பரிசாரகர்களாக உதவிவருவதைச் சில காரணங்களுக்காகக் குருமார் அனுமதித்து வந்திருப்பதை அவர் அறியவந்ததும், திருமறை வழிபாட்டுச் சட்டங்களில் இது தவிர்க்கப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டி அதைத் தவிர்த்திருக்கின்றார்.

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்

## ஆசிரியர்களும் 'ரியூஷ'னும்

அரசாங்கஆசிரியர்கள் மாணவர்களுக்கு "ரியூஷன்" கொடுப்பதால்— அதாவது தனிப்பட்டமுறையில் பாடம்சொல்லிக் கொடுப்பதால் பாடசாலைகளில் மாணவர்களுக்குச் சரியானமுறையில் பாடம் கற்பிப்பதில்லையென்றும், தங்களிடம் 'ரியூஷன்' எடுக்கும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் சலுகை காட்டுகிறார்களென்றும் முறையீடு செய்யப்பட்டதை தொடர்ந்து அவர்கள் இனிமேல் மாணவர்களுக்கு 'ரியூஷன்' கொடுக்கக் கூடாதென்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## தொழில்நுட்பக் கல்லூரி

கொக்குவிலிலுள்ள யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரி பல்கலைத் தொழில்நுட்பக் கல்லூரியாகத் தரம்உயர்த்தப் பட்டுள்ளது. பலாலியில் நடைபெற்றுவந்த பல்கலைத் தொழில்நுட்ப வகுப்புகள் யாழ்ப்பாணத் தொழில் நுட்பக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளமையே இதன் தரம் உயர்த்தப் படக் காரணமாகும். விவசாயத் துறையில் "டிப்ளோமா"ப் பாடவகுப்புகளே பலாலியில் இனிமேல் தொடர்ந்து நடைபெறும்.

## ஜி. சீ. ஈ. பரீட்சை

சென்ற மார்கழிமாதம்நடந்தேறிய ஜி. சீ. ஈ. சாதாரண பரீட்சை முடிவுகள் வருகிற ஆடிமாதம் 20-ந்தேதி வெளிவரவிருக்கின்றன. பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக இப்பரீட்சை முடிவுகள் வெளியிடுவதில் காலதாமதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பஸ்களில் புகைப்பது

போக்குவரத்துச்சபை பஸ்களில் சிகறெற், பீடி, சுருட்டு புகைப்பதைத் தடுத்து விதிக்கப்பட்டதடை சென்ற 15-ந் திகதிமுதல் நடைமுறைக்கு வந்திருக்கிறது. இரட்டைத் தட்டு பஸ்களில் மேற்தட்டு நீங்கலாக அதன் கீழ்த்தட்டிலும், ஏனைய பஸ்களிலும் புகைப்பவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

## ரயர் ரியூப் விலைகள்

அரசாங்க வர்த்தக கூட்டுத்தாபனம் இறக்குமதிசெய்யும் ரயர்கள், ரியூப்புகளின் விலைகள் அதிகரித்துள்ளன. இதற்குக் காரணம், கப்பற்கட்டணங்களின் உயர்வும், தாபனத்தைச் சேர்ந்த சேவையாளர், சில்லறை ஊழியர்களின் சம்பள உயர்வுமேயென்று சொல்லப்படுகிறது.

## மல்லி இறக்குமதி

ருமேனியாவிலிருந்து ஒரு கப்பலிலே பெருந்தொகையானமல்லி கொழும்புத்துறைமுகம்வந்து சேர்ந்துள்ளது. அதனால் தற்போது நாட்டிலுள்ள மல்லித் தட்டுப்பாடு விரைவில் நீங்கிவிடும். மேலும் இம்மாத முதல்வாரத்திலே கொழும்புத் துறைமுகத்தில் 20,265 தொன் நிறையுள்ள சீனி, அரிசி, மாவும் அங்கு வந்து சேர்ந்திருக்கின்றன.

# செய்திகள்

## புதிய புகையிரதக் கட்டணம்

இம்மாதமுதல் நடைமுறைக்கு வந்திருக்கும் புதிய புகையிரதக் கட்டணங்களின்படி கொழும்பு கோட்டையிலிருந்து

| | |
|---|---|
| காங்கேசன்துறை | 11 ரூபா 40சதம். |
| சுன்னாகம் | 11 ரூபா 15சதம். |
| யாழ்ப்பாணம் | 10 ரூபா 90சதம். |
| கிளிநொச்சி | 9 ரூபா 10சதம். |
| வவுனியா | 7 ரூபா 00சதம். |
| மதவாச்சி | 6 ரூபா 35சதம். |
| அநுராதபுரம் | 5 ரூபா 65சதம். |
| மன்னார் | 8 ரூபா 50சதம். |
| திருகோணமலை | 8 ரூபா 15சதம். |
| மட்டக்களப்பு | 9 ரூபா 60சதம். |

## அரசாங்க விடுமுறை நாட்கள்

தேசிய உற்பத்தியைப் பெருக்குமுகமாகத் தற்போதுள்ள பொதுவிடுமுறை நாட்களைக் குறைப்பதுபற்றி அரசாங்கம ஆலோசித்து வருகிறது. உலகில் வேறெந்த நாட்டிலுமே இல்லாத விதமாக இலங்கையிலே அரசாங்கஊழியர்களுக்கு அதிகவிடுமுறை நாட்கள் வழங்கப்படுகின்றன. வருடத்தில் வரும் 50போயா நாட்கள், போயாதினங்களுக்கு முந்திய 50 அரை போயா நாட்கள், மற்றும் 16 விடுமுறைநாட்கள், 14 சுகவீன விடுமுறைநாட்கள், 14 வருடாந்த விடுமுறைநாட்கள், 21 திடீர்விடுமுறை நாட்கள், முன்னைய வாராந்த சனி, ஞாயிறு விடுமுறை நாட்களுக்கு ஈடு செய்யுமுகமாக இருமேலதிக விடுமுறைநாட்கள், மேலதிக இரு அரைநாள் விடுமுறை நாட்கள் அரசாங்க ஊழியர்களுக்கு இப்போது வழங்கப்படுகின்றன.

## மாணவரும் சமயகல்வியும்

சகல பாடசாலைகளிலும் இனிமேல் சமயகல்விக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியதன் அவசியத்தைக் கல்விஅமைச்சு அறிவுறுத்தியுள்ளது. பாடசாலைகளிலே அந்தந்த மாணவர்களின் சமய சம்பந்தமான கல்வியில் விசேட கவனம் செலுத்த வேண்டுமெனவும், பாடசாலைகள் ஆரம்பமானதும் முதலில் நடைபெறும் ஆராதனை வழிபாடுகளின்போது சமயசம்பந்தமான உரை நிகழ்ச்சிகளை நடத்தும்படியும் ஆசிரியர்களை அது கேட்டிருக்கிறது.

## பாடசாலைகள் ஆரம்பம்

நீண்டநாள் விடுமுறைக்குப் பின் சென்ற 9-ம்தேதி புதன் கிழமை சகலபாடசாலைகளும் ஆரம்பமாகின. 1–ம், 2-ம் வகுப்புகளுக்குப் பாடசாலைகள் வாரத்தில் 5நாட்கள்மட்டும் நடைபெறும். ஏனைய பாடசாலைகள் வாரத்தில் ஆறு நாட்கள் நடைபெறும். கொழும்பிலும் மற்றும் பிரதான நகரங்களிலும் பாடசாலைகள் காலை 7-30 மணிக்கு ஆரம்பமாகின்றன. ஒருநேரப் பாடசாலைகள் பிற்பகல் 1–30மணிக்கு மூடப்படுகின்றன. இருநேரப் பாடசாலைகள் பிற்பகல் 2-30 மணிக்கு மூடிவாகின்றன.

## தினமும் 235 பைந்து

நாடுமுழுவதிலுமுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளுக்குத் தினமும் 235பைந்து இரத்தம் தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இரத்த தானம் செய்வாருக்கு ஒவ்வொருமுறையும் 10ரூபா சன்மானம் வழங்கப்பட்டும், மற்றும் சலுகைகள் செய்யப்பட்டும் இரத்தம் தட்டுப்பாடாகவே யிருக்கிறது.

## பம்பாய் வெங்காயம்

பம்பாய் வெங்காயச் செய்கையை ஊக்கப்படுத்துமுகமாக யாழ்ப்பாணம், வவுனியா, அம்பாறை, இரத்தினபுரி, அம்பாந்தோட்டைப் பகுதிகளில் அமைக்கப்படும் பம்பாய்வெங்காய ஆராய்ச்சிநிலையங்களிலும், ஆங்காங்கு சின்னவெங்காயம் செய்கைபண்ணப்படும் 350ஏக்கர் காணிகளிலும் அதனைப் பரீட்சார்த்தமாகச் செய்கைபண்ண அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

## ஞாயிறு விடுமுறை

இலங்கையில் முன்னர்இருந்ததுபோலவும், உலகெங்கும் இப்போதுமே இருந்துவருவதுபோலவும் ஞாயிற்றுக் கிழமையை முழுநாள் விடுமுறைநாளாகவும், முந்திய சனிக்கிழமையை அரைநாள் விடுமுறை நாளாகவும் ஆக்குவதைப் பௌத்த பீடாதிபதிகள் ஆதரிப்பதாகத் தெரியவருகிறது. ஞாயிற்றுக்கிழமையை விடுமுறைநாள் ஆக்குவதைத் தாம் எதிர்க்கவில்லையென்று மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகள் அரசாங்கத்துக்குத் தெரிவித்திருப்பதாக அறியக்கிடக்கிறது. ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளாகுமிடத்து, பூரணைத் தினங்களும் (மாதம் ஒவ்வொன்று) முன்போல விசேட விடுமுறைநாளாக ஆக்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றனராம்.

## மாணவரும் கடன் வசதியும்

இனிமேல் பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படும் விஞ்ஞான, பொறியியல், விவசாய, வைத்தியத்துறை மாணவர்களுக்கும், குறிப்பாக நாட்டின் அவசிய தேவைகளுக்கு ஈடுபடுத்தக்கூடிய ஏனைய துறைகளுக்குத் தெரிவுசெய்யப்படும் முதற்தர மாணவர்களுக்குமே உபகாரச் சம்பள கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

# சுதந்திர ஒளி

(ஆசிரியர் எவ். எஸ். சி. வங்காலை)

இருள்சூழ்ந்த பூவுலகம் விடியறகாலத்தை எதிர்நோக்கி உதயசூரியனின் ஒளிகண்டு மலர்வது போன்றும், கூண்டினைக் கொண்டிருந்த கிளிளை சோலையினுட் செல்லும் வழி கண்டு பறந்துசென்று ஆனந்தமாய் உலாவுவது போன்றும் பிரிந்த தாயை இழந்தபிள்ளை மீண்டும் தன்தாயைக் கண்டடைந்து மகிழ்வது போன்றும், அடிமை இருளகன்று சுதந்திர ஒளிகண்டு விடுதலையடைந்த மக்கள் ஆனந்த அக்களிப்போடு அகமகிழ்ந்து வாழ்வாரன்றோ?

பூவுலகிற் பாவம், நரகம், பசாசின் அடிமைத்தனம் ஆகிய தீங்குகளினின்றும் மனிதரை இரட்சிக்கும் இறைமகன் யேசு தமது ஆருயிர் ஈந்து மோட்ச சுதந்திர உரிமையை மக்களுக்கு அளித்தார். என்றும் அழியாத பேரானந்தம் அளிக்கும் அந்தச் சுதந்திர உரிமையை நாம் பொன்னெனப் போற்றல் வேண்டும்; கண்ணை இமை காப்பதுபோற்காத்தல்வேண்டும்; அதனை இழந்துவிடாது என்றும் விழிப்புடன் இருத்தல் வேண்டும். இங்ஙனம் விழித்தெழுந்த மக்களின் கண்களிலே மண்ணைத்தூவும் தந்திரப் பேய்களின் மாய்கைகளிற் சிக்கி அல்லலுறுவண்ணம் எஞ்ஞான்றும் இறைவனின் அருளைப்பெற்று வாழ்தல் வேண்டும்.

"உன் கண்ணானது உன் சரீரத்தின் தீபமாய் இருக்கின்றது. உன் கண் இயல்பானதாய் இருந்தால், உன் சரீரமுழுதும் பிரகாசமாய் இருக்கும், உன் கண் கெடுதியாய் இருந்தால், உன் சரீர முழுதும் இருளாய் இருக்கும். ஆகையால், உன்னிலுள்ளஒளியே இருளாய் இருந்தால், இருள்தான் எவ்வளவோ மிகுதியாய் இருக்கும்" என்று யேசு திருவாய் மலர்ந்தருளினார்.

நாம் உலகத்திற்குரியவைகளைக் கண்ணுற்றுச் செயல் புரிவதையும், உலகபாரம்பரிய வழக்கங்களைப் பின்பற்றுவதையும், அழிந்துபோகும் பொருளை ஈட்டுவதையும், நிலையற்ற சுகபோக வாழ்வில் ஆவலாய்இருப்பதையும் பிறர் துன்புறச் சுயநலமுடையோராய் வாழ்வதையும் தவிர்த்துச் சருவேசுரனுடைய இராச்சியத்தையும் அவரது நீதியையும் தேடுவதிற் கண்ணும் கருத்துமாய் இருத்தல் வேண்டும்.

இறைவனை ஆராதித்து, பிதா மாதாவைச் சங்கித்து, சன்மார்க்க வழிநடந்து, பிறரை மதித்து அவரை அன்புடன் நேசித்து, நமது கடமைகளைச் சுமுத்திரையாய் நிறைவேற்றி, நேர்மையும சத்தியமுமான பாதையில் வழி நடத்தல் வேண்டும்.

பெற்றோர் தமது பிள்ளைகளை இறைவன் கற்பித்த வழிகளில் சற்புத்திரராய் வாழச் செய்தல் வேண்டும்; உண்மை நேர்மை, அமைச்சல், கீழ்ப்படிதல்முதலாயநற்பண்புடையோராய் அவர்கள் வாழப் பயிற்றல் வேண்டும்; அன்றியும் அவர்கள் தீயவழிகளிற் திரியவிடாது காப்பாற்றுவதில் எப்பொழுதும் விழிப்புடனிருத்தல் வேண்டும்.

"உயிர் கொடுப்பது ஆன்மாவே. மாமிசமானது ஒன்றுக்கும் ஆகாது; நான் உங்களுக்குச் சொன்ன வாக்கியங்கள் ஞானமும உயிருமாய் இருக்கின்றன" என்று யேசு போதித்தருளினார். ஆதலால், நாம் அழிவுறும் உடல்நலன்களைப் பேணுவதிலும், நிலையற்ற இன்பங்களை நாடித்தேடி அனுபவிப்பதிலும் நாட்டங்கொள்ளாது, ஆடை அணிகளால் அங்கங்களை அலங்கரிப்பதில் வீண்பொழுது போக்காது, உடலுக் குரியவைகளை உடைமையாக்கிக் கொள்வதில் கவலைகொள்ளாது இறைவனை விசுவசித்து அவரது வார்த்தைகளின் வழிநடந்து, அவரது சித்தத்தை நிறைவேற்றுவதையே நினைவிற்கொண்டு அவரைப்போற் பரிசுத்தராய் வாழ்தல் வேண்டும்.

"நானே உலகத்தின் ஒளியாய் இருக்கிறேன், என்னைப் பின்செல்பவன் இருளில் நடவாமல் ஜீவியத்தின் ஒளியைக் கொண்டிருப்பான்." "என்னை அனுப்பியவர் என்னோடு இருக்கிறார், அவர் என்னைத் தனியே விட்டுவிடவில்லை. ஏனெனில் நான் எப்பொழுதும் அவருக்குப் பிரியமானவைகளைச் செய்துவருகிறேன்" என்று யேசு போதித்தார், அன்றியும் தம்மை விசுவசித்த யூதர்களைநோக்கி: "நீங்கள் என் வாக்கியத்தில் நிலைத்திருந்தால்மெய்யாகவே என்னுடைய சிஷர்களாய் இருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிந்துகொள்வீர்கள்; சத்தியம் உங்களைச் சுயாதீனராக்கும்; மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், பாவம் செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமைப்பட்டவனாய் இருக்கிறான்." இவைகளையெல்லாம் யேசு போதித்தருளினாரென்று அருளப்பர்தமது நற்செய்தியிற் கூறுகிறார். ஆதலால் நாம் இறைவனை விசுவசித்து, நம்பி அவரை நேசிப்பதற்கு அவரது கற்பனைகளை அனுசரித்துப் பாவத்தை விலக்கிப் புண்ணிய நற்கருமங்களைப் புரிந்து நித்திய ஒளிவீசும் பேரின்பமடைய முயலுதல் வேண்டுமன்றோ?

வாழ்வில் உண்மைகளை மறைத்துப் பொய்வார்த்தைகளை உரைத்து வருவதால் நாம் ஒளியின் பாதையினின்றும் விலகி இருளின் வழியிற் செல்பவராவோம். உலகிற் தீமைகளை விதைத்து வரும் சாத்தானின் பொய்வழிகளை முற்றாக விலக்குதல் வேண்டும், "சத்தியம் அவனிடத்தில் இல்லாததினாலே சத்தியம் அவனிடத்தில் நிலைக்கவில்லை" என்று யேசு கூறினார். ஆதலால் தீமைகளைப் புரிய ஏவிவிடும் சாத்தானின் துர்ப்புத்தியினால் அழிவுறும் பொருள், இன்பம் இவைகளில் மயங்கிவிழாது, பொய், பொய்வழி, பொய்வழக்கு, பொருளாசைமுதலாய தீமைகளைத் தவிர்த்து உண்மையினைக் கைக்கொண்டு சத்தியப்

(மறுபக்கம் பார்க்கவும்)

# அவதானி — அன்பு செய் — பணி புரி

வாழ்க்கையோட்டத்திலே —வரலாற்றின் மத்தியிலே— வளர்ச்சியின் பாதையிலே கருத்துமிக்க கண்ணியமான பல நாட்களை, நாம் திருவிழாவாக்கி மகிழ்கின்றோம். பெருநாளாக்கிப் பெருமையடைகின்றோம். திருநாள் என்று திருப்தியடைகின்றோம். வருடாவருடம் வருவதுதானே என்று சில வேளைகளில் அதன் பெருமையும் அருகிவிடுகின்றது. ஆனால்நாம் அண்மையில்எடுத்த விழா சாதாரணநினைவு விழா அல்ல; மனித வாழ்வுடன் தனிப்பெரும் ஈடுபாடு கொண்ட புனித விழா, இறைவனை நோக்கி இறைமகன் கொள்ளும் பயணத்தில், உள்ளத்தில் உறையும் உத்தமனின் துணையுடன் குறையின்றி நடந்துசெல்லத் தூண்டிவிடும் தூய விழா; வானகம் நாடிச் செல்லும் வழியில், இவ் வையக மாந்தரனைவரையும் ஊக்குவித்து, முறைப்படி வழிச்செலுத்த முன்னிற்கும் மறைபரப்பு விழா.

## அவதானி;

இன்றைய நிலையில் எம் அகக்கண்களை அகலத் திறந்து புறக்காட்சியை மட்டுமன்று, அகக்காட்சியையும் கண்டுகொள்வது பயனுடைத்தாகும். திருமுழுக்கென்னும் திருவருட்சாதனத்தால், திருச்சபையின் குருகுலத்தில் ஒருவரான நாம் மறைபரப்புப் பணியில் நிறைவுறக் கொடுக்கும் பங்கு தான் என்ன? பரன்மகனின் நற்செய்தி ஏடேந்திப் பறைசாற்றவேண்டிய நாம் ஆலய மூலையில் மறையோதி வாழ்ந்தால் போதுமா? அப்படியாயின் செய்ய வேண்டியதென்ன? இத்தகைய வினாக்கள் இன்றைய சூழ்நிலையில் எம்மிடை எழ வேண்டியவைகளே. விடை பகரவேண்டியது எம் ஒவ்வொருவரினதும் பொறுப்பு.

இறைவன் தன் இரட்சணியத் திட்டத்தில் கிறீஸ்தவன் ஒவ்வொருவனுக்கும் மறைபரப்பு பணியில் பங்கு கொடுத்திருக்கின்றார். வாழ்வின் மேன்மையிலும், தாழ்வின் கீழ்மையிலும் இப்பாரிய கடன் அவனுடன் அட்டைபோல் ஒட்டிக்கொண்டிருக்கிறது. தன்னுலியன்ற பணிபுரிவது அவனது கடன்.

கிறீஸ்தவனே! உனது சூழலைப்பார்! பார்ப்பதில் நின்று விடாதே. நன்கு அவதானி. கடவுளின் பெயரையே அறியாது வாழ்கின்றவர் எத்தனைபேர்! திருமுழுக்குப்பெற்றும் இறைக்கொள்கையே அற்று வாழ்வோர் எத்தனைபேர்! உன்னை சூழ இருப்பவர்களை நன்கு அவதானித்துப்பார். நம் திருமறைமூலம் அவர்கள் இறைவனை அண்மித்து விட்டார்களா? கண்ணிருந்தும் நீ காணாமல் வாழலாமா? நாவிருந்தும் பேசாமல் வாழலாமா? விசுவாச ஒளியிருந்தும், மரக்காலின் கீழ் மூடி வைப்பது எவ்வளவு மதியீனம்! கிறீஸ்தவனே! மீண்டும் ஒரு முறை உன் வாழ்வின் சூழலை நன்கு அவதானி. ஆவன செய்யத் தீவிரித்துப் போ.

## அன்பு செய்:

அறிவு அன்புக்கு இட்டுச் செல்கின்றது. அன்பனை அறிவதற்களவாய் அவனிடம் அன்பு பெருகும்; பாசம் பரிணமிக்கும். உன் சூழலை அறிவதற்களவாய் நீ அதனைச் சுமுகமாய் அன்பு செய்வாய். இறைவன் உனக்களித்த இன்பச் செல்வங்கள் அவை என்பதை உணர்ந்து கொள்வாய். "ஆக்கம் அளவிறுதியில்லாய் அனைத்துலகும் ஆக்குவாய் காப்பாய் அருள் தருவாய்" என்று மாணிக்கவாசகரால் போற்றியுரை செய்யப் பெற்ற புனிதன், உனக்காக உருவாக்கியளித்த உலகம் இது. உயிரும், ஒளியும் உருவும், கருவும் உனக்காகத்தான். பூத்துக் குலுங்கும் பூவினமும், பாடி மகிழும் பறவையினமும், நடமாடும் விலங்கினமும், உன்னைச் சுமந்திருக்கும் சகலமும் உனக்காகத்தான். உன் நலனுக்காகத்தான். ஏனெனில் நீதான் தெய்வசாயல் கொண்ட மனிதன். நீ அவற்றைப் பயன்படுத்தும் தன்மையில், படைத்தவரின் புகழை அவை பாடிக்கொண்டேயிருக்கும். படைப்பனைத்தும் நடாத்தும் இந்த இன்னிசைக் கச்சேரியை இயக்கி வைப்பவன் நீதான். எனவே அவையனைத்தையும் அன்பு செய்வது உன்கடன். இதில் மேலான இடம் பெறவேண்டியது உன்னைப்போன்ற உள்ளம் கொண்ட மனிதன்தான் உன்னைச் சூழ்ந்திருக்கும் மானிடர் அனைவரும் உன் அன்பைப் பெற்றுக்கொள்ளும் உரிமையைக் கொண்டிருக்கின்றனர். இது இறைவன் அளித்த உரிமை. இந்த உரிமையை நிறைவேற்றி வைப்பது உன் பாரியகடமை. எனவே அனைத்தையும் அன்பு செய்.

## பணி புரி

அமலனின் உருவாகி அனைத்துலகையும் அரவணைத்து நிற்கும் இந்த அன்பானது சேவையில் மிளிர்கிறது பணி புரிவதில் தணியாத் தாகம் கொள்கின்றது. தியாகம் வரினும் தயக்கமின்றி எதிர்கொள்ளச் செய்கின்றது நம் திருமறையின் பரப்புதலுக்கு விழா வெடுத்து மகிழும் இந்நேரத்தில் சேவையின் செம்மையை சிந்தையில் வரவழைத்துக் கொள்ள வேண்டும்.

விஞ்ஞானம் மேலோங்கி, மெய்ஞ்ஞானத்தை மறந்து, அஞ்ஞான கோலத்தில் தீவிரித்துச் செல்லும் தீமையின் சக்திகள் இன்று ஏராளம், உலகில் அமைதியில்லை. படைப்பனைத்தும் சாந்தியின்றி சோர்ந்து வாடுகின்றன. உள்ளரங்கத்தில் உண்மைச் சாந்தியை நாடும் மனிதன்,வெளியரங்கத்தில் தன்னை வழிகாட்டக்கூடிய ஒளியைத் தேடுகின்றான். அவனது இந்த இரு புறவேட்கைக்கு, நிறைவான பதிலளிப்பது நம் திருமறை. கலங்கித் தவிக்கும் மாந்தர்க்குக் கலங்கரை விளக்காக விளங்க வேண்டியவன் கிறீஸ்தவன். திரு முழுக்கில் அவன் பெற்ற கடமை இது.

அவனுக்காகக் காத்துக் கிடக்கும் இப்பணி சமூகத்தின் அணுவான குடும்பத்திலேயே மொட்டாகி அரும்பவேண்டும். கிறீஸ்துவை

---

**சங். சகோதரி பொனவேஞ்சர்**

---

உள்ளங்களில் உருவாக்கும் பணி இங்குதான் ஆரம்பிக்கிறது. மறைபரப்புப்பணியில் குடும்ப அங்கத்தினர் ஒருவர் ஒருவர்மட்டில் கொண்டுள்ள கடமையை நிறைவேற்றுவதாலும், நன்மாதிரியாலும் பங்கு கொள்கின்றனர். வீட்டில் இடப்பட்ட வித்து பாடசாலையில் முளைவிட்டு வளர வேண்டும். வளர்ந்து சமுதாயத்தில் ஒருவனாகியபின் தன்னைச் சூழ்ந்திருப்போரால் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லப்படுவான்.

மறைக்கல்வி வகுப்புகள் மட்டும்தான் மறைபரப்புப் பணியைமேற்கொண்டுள்ளன என்ற தப்பெண்ணத்தை நீக்கவேண்டும், கிறீஸ்தவன் எவ்விடத்திலும், எத்துறையிலும் எவ்வயதிலும் இப்பணியை ஆவலுடன் அரவணைக்க வேண்டும். 'தான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பெரும்பண்பு, 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற கடமைச் சட்டத்தில், அன்போடு பின்னிப் பிணைந்து இணையவேண்டும். தான்பெற்ற விசுவாசஒளியைத் தன் அயலானின் இதயத்திலும் ஏற்றிவைக்கவேண்டும். ஒளியை நோக்கிவாடும் இருண்ட இவ்வுலகம், உண்மைஒளியை விரைவில் காண வேண்டும். இதற்காகக் கிறீஸ்தவன் ஒவ்வொருவனும் பகிரங்கமாகவோ, மறைமுகமாகவோ மறைபரப்புப் பணியில் தணியா வேகத்துடன் உழைக்க வேண்டியதவசியம். உலகைப் படைக்களன்று தன்னிலேமலர்ந்த அமலனின்அன்பு ஒன்றுதான் இதனை எமக்கு ஆக்கிவைக்கமுடியும். எனவே வாழ்க்கையாகிய வீணையை எடுத்து, அன்புஎன்னும் தந்திகளைச் சேவைஎன்னும் விரல்களால்மீட்டி, இறைவன்செவிகளில் இனியநாதம் இறைத்து நிற்போம். அதுவே என்றும் அவர்தம் மகிழ்வாகும்.

வணக்கம்!

---

### சுதந்திர ஒளி

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பாதையில் வழிநடந்து உண்மை ஒளியினைக் கண்டடைய விழிப்புடனிருந்து இறைவனின் வார்த்தைகளுக்குச் செவிசாய்த்து அவற்றிலே நிலைத்திருக்க வேண்டும்.

"சருவேசுரனால்உண்டானவன் சருவேசுரனுடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுக்கிறான்" என்று யேசுபோதித்திருக்கிறார். ஆதலால் சத்திய சொரூபியாகிய சருவேசுரனுடைய வார்த்தைகளை ஏற்று உள்ளத்தில் உண்மைஒளிவீச வாக்கினிலே உண்மைபேசி வாழ்க்கையின் கருமங்களைப் புரிவதில் நேர்மையும், உண்மையும் உடையோராய் வாழ்தல் வேண்டுமன்றோ.

"மனிதனுடைய இருதயத்திலிருந்தே துர்ச்சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபச்சாரங்களும், காமங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தேவதூஷணங்களும்புறப்படுகின்றன. இவைகளே மனிதனை அசுத்தப்படுத்தும்" என்று யேசு தம் போதனையில் எடுத்துரைத்தார். ஆதலால், வெளியே புனிதமாக்கி அழகுபடுத்தும் அலங்காரங்களைச் சிருட்டிப்பதிலும், நாகரிகமென தீமையுறும் நவீனமுறை ஆடை அணிகளைத் தரித்து வாழ்வதிலும், சந்தனம்போற் குளிரப்பேசி மற்றோரைத் தம் வசப்படுத்திச் தீயநலக் கருமங்களைப் புரிவதிலும் தீதொழிய நிலையான நன்மைஎதுவும் ஏற்படாதென்பதை மனதிற் கொள்ளுதல் வேண்டும்.

ஆதலால் நாம் நித்திய சீவியரின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து, பரிசுத்த ஆவியின் அருளினால் நம் இதயகமலம் சுடர்விட்டெரியத் தூய்மையெய்தி, ஒளியின் பாதையில் வழிநடந்து, யேசுக்கிறீஸ்துநாதர் தமதுஇரத்தத்தினால் அடைந்துதந்த சுதந்திரத்தை விலைமதித்தற்கரிய கருந்தனம்போல் மதித்துப் பேணிக் காத்துவந்தால் மோட்ச இராச்சியத்தின் சுதந்திர சோலைகளிலே தித்திக்கும் தேனினுமினிய ஜீவியத்தின் கனிகளை ஆய்ந்து அன்புடன் புசித்துக் குளிர்ச்சியும், பிரகாசமுமுள்ள நித்திய ஒளியில் எஞ்ஞான்றும் பேரின்பமாய் வாழ்ந்திடலாமன்றோ?

### நானே நல்ல...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறந்தோம். ஆன்மஉயிர், இறைஉயிர் எமக்கு அருளப்பட்டது. அந்த இறைஉயிரை ஏழைய திருவருட் சாதனங்கள் வளரச் செய்கின்றன. அன்று கிறீஸ்துதானே மக்களை வழிநடத்தினார். இன்று தம் திருச்சபைவழியாகத் தம் மக்களை மேய்க்கின்றார். மறை ஆயர்கள், குருக்கள்மூலம் தமது திருமந்தைகளை மேய்க்கின்றார், வழிநடத்துகின்றார். இறைமகன் கிறீஸ்துவின் பெயரால் அவர்பிரதிநிதியாக இவர்கள் எம்மை விண்ணக வீடுநோக்கி வழிநடத்திச் செல்கின்றார்கள்.

எல்லோருக்கும் மேலாக இறைபரன் கிறீஸ்து தம் மந்தைகளுக்காகத் தம உயிரைக் கொடுத்தார். அதுவே பெரிய தியாகம், மேலான தியாகம். ஆகவேதான் அவர் நல்லாயனாக, நல்ல மேய்ப்பனாகத் திகழ்கின்றார்.

**வாழ்விக்கும் நல்லாயன்**
**கிறீஸ்து**
**அவரின்வாழ்கின்ற வெள்ளாடு**
**நாமே!**

---

✠

**திரு. சே. அல்பிரட் துரைசிங்கம்**

பரமபதமடைந்த

## 1-ம் வருட ஞாபகம்

**மறைவு: 26-6-70.**

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வாழ்விலும் நனி சிறந்தனவே" என்ற புலவன் வாக்குக்கமைய, தாய்நாட்டுப் பற்றுமிக்க இவர் தான் பிறந்த இடமாகிய நாவாந்துறை வடக்கு வாசிகளின் முன்னேற்ற காரியங்களில் முன்னின்று உழைத்தவர். குன்றாத இறைபக்தியும் கடமையுணர்ச்சியும் மிக்க இவரது ஆன்ம சாந்திக்காக வங்காலை, புனித அன்னம்மாள் ஆலயத்திலும், நாவாந்துறை, பரி. பரலோகமாதா ஆலயத்திலும் திவ்விய பூசைப்பலிகள் 26-6-71-ல் ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் குருமார், கன்னியர், உற்றார், நண்பர்கள் யாவரும் இவரது ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்படி வேண்டுகின்றோம்.

துயருறும்: மனைவி, மக்கள், தாய், சகோதரர், இனசனர்.

நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம். 68-71

---

✠

நெடுந்தீவு மத்தி

**அ. ஞேசமுத்து அவர்கள்**

அமரத்துவமடைந்த

## 2-ம் வருட ஞாபகம்

**மறைவுதினம்: 26-6-69**

"இரக்கமுள்ள யேசுவே! நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும், சமாதானத்தில் இளைப்பாறுவாராக."

இவரின் ஆன்மசாந்திக்காக 26-6-71இல் நெடுந்தீவு புனித யுவானியார் ஆலயத்தில் திக்கப் பாடல்பூசை ஒப்புக் கொடுக்கப் படும். இதைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியர், மற்றும் உறவினர் சிநேகிதர் யாவரும் இவருக்காக மன்றுடும்படி பரிவுடன் கேட்கிறோம்.

இவரது பிரிவால் துயருறும்: கணவர், மக்கள், உறவினர்

69-71

---

### வாழ்க்கைச்செலவு

சென்ற வைகாசி மாதத்தில் வாழ்க்கைச் செலவுப் புள்ளிகள் 140.2. இது முந்திய மாதத்திலும் 0.3 புள்ளிகளால் கூடுதலானது.

### சாகிய, சமய விகிதம்

இலங்கைக் குடிசனத்தொகையில் சிங்களவர் தொகை 70·2விகிதம். இலங்கைத் தமிழர் 12·3விகிதம், இந்திய தமிழர் 9·9விகிதம். சமயத்தைப் பொறுத்தமட்டிலே பௌத்தர்கள்தொகை 66·00. இந்துக்கள் 9·3, கிறிஸ்தவர்கள் 7·00 விகிதத்தினர்.

### 3,000 ஆங்கில ஆசிரியர்கள்

சகல பாடசாலைகளிலும் 6-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்குவதென்று கல்விமந்திரி செய்துள்ள முடிவை நடைமுறைக்குக்கொண்டு வருவதற்கு மேலதிகமாக 3,000 ஆங்கில ஆசிரியர்கள் தேவைப்படுவதாக மதிப்பிடப்படுகிறது. நாடுமுழுவதிலுமுள்ள சகல அரசினர் பாடசாலைகளிலும் தற்போது 17,000 ஆங்கில ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். இவர்களில் 4,000 பேர்மட்டுமே பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள்.

### தலையங்கம்

கொழும்புத் தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதி பெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்ய வேண்டியிருப்பதாலும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளி வரும் எங்கள் பத்திரிகை அதிகாரியின் அங்கீகாரத்தை உரியநேரத்தில் பெறுவது இயலாமையாலும் சில தினங் களுக்கு ஆசிரியத் தலையங்கங்கள் வெளிவரமாட்டது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளு கின்றோம்.

சத்தியவேத பாதுகாவலன்

# "குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்"

"உனக்குக் கர்த்தவான தேவன் நாமே......எம்மை யல்லாது வேறு தேவர் உனக்கில்லாதிருப்பதாக."

அன்பும் வல்லமையும் பொருந்திய சிருஷ்டிகராக இறைவனையும், அன்புமிக்க தந்தையின் படைப்பாகவும், பிள்ளையாகவும் தன்னையும் எண்ணிப்பார்க்கக்கூடிய பரிபக்குவம் உடையவனே இம்முதலாவது கற்பனையைச் சரிவர விளங்கிக்கொள்ள முடியும். எல்லாக்காரியங்களிலும் தேவசித்தத்துக்கு அமைந்து நடப்பதே இக்கற்பனையை முழுமையாக நிறைவேற்றுவதாகும். அவருக்கு அன்பும் புகழ்ச்சியும், நன்றியறிதலும் வேண்டுதலும் செலுத்துவதோடு சகலத்தையும் இறைவனது நோக்குடன் பார்த்தலும், அவரது திட்டங்களைத் தடுக்க முயலாது அவருடன் பூரணமாக ஒத்துழைப்பதுமாகும்.

ஒரு குழந்தையின் உள்ளத்தில் இறைவனைக்குறித்து இத்தகைய ஒரு கருத்து உருவாகுவதற்கு, இறைவன்மீது அன்பு அரும்புவதற்கு நாம் செய்யக்கூடியது என்ன? செபிக்கக் காட்டிக்கொடுப்பதுதான். செபிப்பதற்கும் செபம் சொல்லுவதற்கும் ஒரு பெரும் வித்தியாசம் உண்டு. செபங்களைச் சொல்லத் தெரிந்தால் மட்டும் போதாது, இறைவனுடன் உரையாடவும் தெரியவேண்டும். மூற்றுக அசட்டைசெய்வது போலவே அளவுமீறித் திணிப்பதும் தீங்குவிளைப்பதாகும். ஏனெனில் பொருள்விளங்காத நீண்ட செபங்களைச் சொல்லும்படி வற்புறுத்தப்பட்ட குழந்தைக்கு கடவுளோடு தொடர்புடைய எல்லாவற்றிலும் வெறுப்பு ஏற்படுவது இயற்கை. குழந்தைகளுக்கு நீண்டநேரம் எதிலும் கவனம்செலுத்த முடியாதாகையால் சுருக்கமும் எளிமையும் உள்ள செபங்களே கற்பிக்கப்படவேண்டும். குடும்ப செபங்களில் பிள்ளைகள் எல்லோரும் பங்குபற்றுவது விரும்பத்தக்கதுதான் என்றாலும் ஆரம்பத்தில் கட்டாயப்படுத்துவது நல்லதன்று. குடும்ப செபத்தில் பங்குபற்றுவதை ஒரு பெரும் பேருக அவன் கருதச்செய்யவேண்டும். முழந்தாளிடுதல், கைகூப்புதல் முதலிய வெளிச்செயல்கள் இறைவனிடத்து மனதைச் செலுத்தவே துணைபுரிகின்றன என்பதைச் சிறிதுசிறிதாக அவன் உணர்ந்துகொள்வான். முழந்தாளிட்டுச் செபிக்கவேண்டியதுதான்; ஆனால், முழந்தாளிடும்போது மட்டும்தான் செபம் என்ற எண்ணம் ஏற்படக் கூடாது.

உடலுக்கு சுவாசம் எவ்வளவு இன்றியமையாததோ அதேபோன்று ஆத்துமத்துக்குச் செபம் இன்றியமையாததாகையால் ஒரு குழந்தைக்குச் சரியாகச் செபிக்கக் கற்றுக் கொடுப்பது மிக முக்கியமாகும். அவன் வளர்ச்சியடைய இறைவனுடன் அவன் கொண்ட உறவும் முதிர்ச்சியடையும். திருச்சபையின் அதிகாரபூர்வமான செபமாகிய திருவழிபாடு தனிப்பட்ட செபங்களுக்கெல்லாம் வழிகாட்டும்.

பரலோகமந்திரம், பிரியதத்த மந்திரம், திரித்துவ மந்திரம், விசுவாச மந்திரம், உத்தம மனஸ்தாப மந்திரம் ஆகிய செபங்களை மனப்பாடம்செய்த சிறுவனுக்கு, இச்செபங்களின் ஒவ்வொரு சொற்றொடரிலும் அடங்கியிருக்கும் பொருளை விளக்கி அவன் அறிந்த வேதசத்தியங்களுடன் தொடர்புபடுத்திக் காட்டியபின் அவனது செபவாழ்வு மலர போதிய வசதிகளைச் செய்துகொடுத்தலே செய்யவேண்டியதாகும். நாளாந்த அலுவல்களில் செபத்துக்குப் போதிய நேரமளித்து ஏனைய காரியங்கள் அவனது வாழ்வை முற்றும் ஆக்கிரமித்துக்கொள்ளாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.

சிலர் திருச்சுரூபங்களையும் படங்களையும் அதிகமாக வீட்டில் சேர்ப்பது பக்திக்கடையாளமென எண்ணுகின்றனர். ஆனால் இவை நிச்சயமாக குழந்தையின் மனதை இறைவனின்பால் இழுக்கும் என்று கூறமுடியாது. அநேக பொருள்கள் பக்தியைத் தூண்டமாட்டா. சிந்தனையைத் தூண்டக்கூடிய ஓரிரண்டு இருந்தாற்போதும். சில மக்கள் அறிந்தோ அறியாமலோ அருட்கருவிகளாகிய பொருட்களுக்கு திருவருட்சாதனங்களைவிடக் கூடிய முக்கியத்துவம் அளிக்கின்றனர். இது இருவகையில் தீங்காயிருக்கக்கூடும். போதிய சமய அறிவு இல்லாத சிறுவர் பெற்றோரின் மனப்பான்மையைப் பின்பற்றுவர். மற்றவர்கள் இதற்கு நேர் எதிரான முறையில் அருட்கருவிகளையே அலட்சியம் செய்யத் தொடங்கிவிடுவர். திருவருட்சாதனங்களுடன் ஒப்பிட முடியாவிட்டாலும் அருட்கருவிகள் எத்தனையோ விதத்தில் தேவ அருளைக் கொடுக்கின்றன. ஆகவே சிறுவர் அவற்றிற்குரிய மதிப்பைக்கொடுத்து அவற்றால் பயனடையவும் செய்யவேண்டும்.

தம் சிறுவருக்கு சமய அறிவை ஊட்டும் பெற்றோர் நிச்சயமாக அவர்களுக்குச் செபிக்கும் முறையைக் காட்டிக் கொடுக்கவேண்டும். செபித்தல் என்பது வெளியரங்கமான ஒரு செயலாக மட்டுமல்ல உள்ளத்தின் ஒரு பண்பாகவும் அமையச் செய்தல்வேண்டும்.

# நானே நல்ல ஆயன்

"நல்ல ஆயன் நானே; தந்தை என்னை அறிவது போலவும், நான் தந்தையை அறிவதுபோலவும் என்ஆடுகளை நான் அறிவேன். அவையும் என்னை அறிகின்றன. என் ஆடுகளுக்காக என் உயிரைக் கொடுக்கிறேன்" அரு. 10: 14—15

ஆடுகளை மேய்ப்பவன் ஆயன்; ஆடுகளை நல்லமேய்ச்சல்உள்ள இடத்திற்கு பசும்புற்றரைக்கு நடத்திச செல்பவன் ஆயன்; தாகம்தீர தண்ணீர் பருக நீர்ச்சுனை நாடி ஆடுகளை வழிநடத்துபவன் ஆயன்; ஆடுகளுக்கு ஆபத்தின்றிக் காப்பவன் ஆயன். அவற்றைப் பட்டி (தங்குமிடம்) யில் சேர்த்து அதில படுத்துறங்க வழிசெய்பவனும் ஆயனே. ஆகவே ஆயனின் அலுவல் சுருங்கக் கூறின், ஆடுகளை அறிந்து அவற்றிற்கு வாழ்வழித்து, புதுவாழ்வைக் கண்டடையச் செய்வதேயாகும்.

திருமறைநூலைப் புரட்டிப் பார்த்தால ஆயனைப்போன்று சிலர் இறைவனின் மக்களை வழிநடத்தி வந்தனர்என்பது வெள்ளிடைமலைபோல் துலங்கும்.

இஸ்ராயேல் மக்களின் மீட்பர்; விடுதலைவீரன்; ஆபிரகாமின் வழித்தோன்றல்; சட்டத்தின் தலைவன் என்றெல்லாம் போற்றப்படும் மோயிசன் ஓர் ஆயனே.

குலத்தந்தை சூசையின் காலத்திற்குப்பின் இஸ்ராயேல் இனம் எகிப்திய மன்னனுக்கு அடிமைப்பட்டது. மன்னனின் கொடியகட்டளையால் ஆண்இனம் அழிந்தொழிந்தது. எனவே, இஸ்ராயேல் மக்கள் தம்மை வழிநடத்த ஓர் ஆயன் இல்லையேஎன்று கலங்கினர். ஒரு சிறந்தவீரன் இல்லையேஎன்று வருந்தினர்.

(ச. வில்பிறட், மறையாசிரியர்)

ஆகவே, இறைவன் அவர்களுக்கு ஓர்ஆயனை, ஒருவீரனை அருளினர். அவரே விடுதலை வீரன் மோயிசன்.

ஆயனாக அனுப்பப்பட்ட மோயிசன் தன் அலுவலைத் திறம்படச் செய்துவந்தார். இறைவனின் திருச்சித்தத்தைச் செவ்வனே செய்துவந்தார்.

இறைவனின் துணையால் புதுமைகள் பலசெய்து, அற்புதங்கள் பலநிகழ்த்தி, இஸ்ராயேல்மக்களை அடிமைத்தனத்தில் இருந்து மீட்டுவந்தார். அரசன் படையுடன் பின்தொடர்ந்தபோதும், இன்னல் பல நிகழ்ந்தபோதும் முன்னின்று இறைவனின் உதவியால், தனது திறமையால் அவர்களை வென்றார். இறைமக்களை ஆபத்தின்றிக் காத்தார். அவர்கள் பயமின்றி வழிநடக்க உதவினர்.

அவர்கள் பாலைவனத்தில் வழிநடந்தபோதும், உணவு இன்றி அல்லற்பட்டபோதும் குடிநீரின்றிக்குளறியபோதும் தங்க இடமின்றித் தவித்த போதும், கர்த்தரின் உதவி பெற்று அவைகளை நிவர்த்தி செய்தார்.

துன்பங்கள் நேர்ந்தபோதும் துயரங்கள் எய்தியபோதும் சலித்தவர் அல்லர். தன் ஒரேநோக்கான கானான்நாட்டை நோக்கித் தன் மக்களை வழிநடக்கச் செய்தார். தேனும், பாலும்பொழியும் கானானைச் சென்றடைவதையே தன் ஏகநோக்காகக்கொண்டு வழிசென்றார்.

இவ்வாறு ஆரோன், அபிரகாம், நோவா, யாக்கோப் இவர்களும் தம் மக்களை— இறைவனின் மக்களை வழிநடத்தி வந்தனர். பின் இறைவாக்கினர், இறைவனின்பெயரால் மக்களை வழிசெல்லச் செய்தனர். கடைசியாக...

காலம் கடந்தது. ஆண்டுகள்பல அகன்றன. காலம் கடந்த கலிலேயன், சாவை வென்றசத்தியன், புதிய இஸ்ராயேலரின் புனித தலைவன், மீட்பர், மெசியா என்றெல்லாம போற்றிப் புகழப்படும் இறைமகன் யேசு இம் மண்ணகம் வந்தார், தம மந்தைகளாகிய மக்களை மேய்க்க, தம் மக்களை இறைவனடி சேர்க்க வந்துதித்தார்.

ஆடுகளை அறிந்து, அதை நேசித்து அதை நீர்நிலைக்கு அழைத்துச்சென்று அதைப் பசும் புற்றரையில் மேயச் செய்து, வீடுகொணர்ந்து சேர்ப்பவன் நல்ல ஆயன், ஆடுகள்மீது அன்பின்றி, கவனமின்றி அதைமேய்ப்பவன். கூலிக்காக மேய்ப்பவன். ஆபத்து வந்தபோது ஓடிப்போபவன் போலி ஆயன்.

ஆனால், கிறீஸ்து தம்மை நல்ல ஆயன்என்று கூறினர். ஆம், அவர் ஒருநல்ல ஆயன் தான். மந்தைகளாகிய எம்மை அவர் அறிகின்றார், நேசிக்கின்றார், வாழ்வு தரும் வாழ்வுச்சுனைக்கு அழைத்துச் செல்கின்றார்; ஆன்ம உயிர் தரும் பசும்புற்றரை போன்ற திருஅருட்சாதனங்கள்மூலம் நாம் புத்துயிர்பெறச் செய்கின்றார், உண்மை, திருவருட்சாதனங்கள் (தேவதிரவிய அனுமானங்கள்) எமக்கு வாழ்வு தருபவைதான். புத்துணர்வு அளிப்பவைதான்.

திருநீராடலில் (ஞானஸ்நானத்தில்) நாம் புது மனிதர்களாக, இறைமக்களாகப்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## பூசை வழிகாட்டி
### ஆனி — 1971

20. ஞாயிறு — ஆண்டின் 12-ம் ஞா. [ப]
    1ஆம் வாசகம்: சக்க. 12: 10—11
    2ஆம் வாசகம்: கலா. 3: 26—29
    சுவிசேஷம்: லூக். 9: 18—24
21. திங்கள் — புனித ஞானப்பிரகாசியார் [வெ]
    வாசகம்: திருவெளி. 3: 14, 20—22
    சுவிசேஷம்: மத். 19: 3—12
22. செவ்வாய் — நாள் பூசை [ப]
    வாசகம்: ஆதி. 13: 2, 5—18
    சுவிசேஷம்: மத். 7: 6, 12—14
23. புதன் — நாள் பூசை [ப]
    வாசகம்: ஆதி. 15: 1—12, 17—18
    சுவிசேஷம்: மத். 7: 15—20
24. வியாழன் — புனித ஸ்நாபக அரு. [வெ]
    1ஆம் வாசகம்: இசை. 49: 1—6
    2ஆம் வாசகம்: அப். பணி. 13: 22—26
    சுவிசேஷம்: லூக். 1: 57—66, 80
25. வெள்ளி — நாள்பூசை [ப]
    வாசகம்: ஆதி. 17: 1, 9—10, 15—22
    சுவிசேஷம்: மத். 8: 1—4
26. சனி — நாள் பூசை [ப]
    வாசகம்: ஆதி. 18: 1—15
    சுவிசேஷம்: மத். 8: 5—17

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 ஆம் இலக்க 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஆனி மாதம் 19-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: 'கதலிக்பிறஸ்,' யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம்: 1876.